மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாயம்

(சிறப்பு சார்பு நீதிமன்றம் எண். 1, சேலம்.)

முன்னிலை: திருமதி.கா.கன்யாதேவி, B.A., B.L.,

சிறப்பு சார்பு நீதிபதி எண். 1, சேலம்.

2026-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ம் தேதி புதன்கிழமை

MCOP.No.343/2025

CNR No.TNSA0B-000316-2025

மாரியப்பன், வயது 42 ,
த/பெ. கோவிந்தசாமி,
கதவு எண்.180,
அண்ணா சாலை குறுக்கு தெரு-1,
தவுட்டுபாளையம்,
அந்தியூர் தாலுக்கா,
ஈரோடு - 638 501. .. மனுதாரர்

// எதிர்//

1. பசவராஜு, வயது 26,
த/பெ. கோவிந்தா,
எண். 23,
பட்டினத்தார் தெரு,
மேட்டுப்பாளையம் அஞ்சல்,
கோபிசெட்டிபாளையம்,
ஈரோடு - 638 315.

2. அம்பிகாவதி,
கதவு எண். 1/48A,
முதலியார் தெரு,
அக்கமாபேட்டை அஞ்சல்,
சங்ககிரி தாலுக்கா,
சேலம் - 637 301.

3. பஜாஜ் அலையன்ஸ் ஜெனரல்
இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
எண்.68,
முதல் தளம்,
SLS டவர்ஸ்,
செரி ரோடு,
சுப்ராயன் லேஅவுட்,
அஸ்தம்பட்டி,
சேலம் – 636 007. .. எதிர்மனுதாரர்கள்

இம்மனு 20–01–2025ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, விசாரணைக்கு பின்னிட்டு 07.08.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ரமேஷ் அவர்கள் ஆஜராகியும், 1,2ம் எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினராகளாக்கப்பட்டும், 3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.E.வீரக்குமார் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகள் கேட்டும், வழக்கு ஆவணங்களை ஆய்வு செய்து இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:–

## உத்தரவு

14.11.2024ம் தேதி நடந்த மோட்டார் வாகன விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக ₹.25,00,000/– இழப்பீடு கோரி இம்மனுவினை மோட்டார் வாகன சட்டம் பிரிவு 166 உ/இ விதி 3 தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் விபத்து கோரிக்கை தீர்ப்பாய விதிகளின் கீழ் தாக்கல் செய்துள்ளார்.

1. ***மனுவின் சுருக்கம்:–***

கடந்த 14.11.2024ம் தேதி காலை சுமார் 07.45 மணியளவில் மனுதாரர் ஆப்பக்கூடல் – சக்தி பிரதான சாலையில், அத்தானி கைக்காட்டி ஜெயம் பேக்கரிக்கு அருகில், சாலையின் இடது புறத்தில் நின்று கொண்டிருந்தபோது, TN 52 M 8174 (Mahendra Supro Max) என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் ஓட்டுனர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி எந்தவொரு போக்குவரத்து விதிமுறைகளையும் பின்பற்றாமல் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர்

மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தில் மனுதாரருக்கு Right leg bimalleolar fracture open, right foot crush degloving injury with skin loss left leg skin avulsion injury, head injury, right side clavical fracture, right side hip injury, right side rib fracture, injuries all over the body ஆகிய காயங்கள் ஏற்பட்டது. உடனே மனுதாரரை அந்தியூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு, மேல் சிகிச்சைக்காக ஈரோடு எமர்ஜென்சி கேர் மருத்துவமனையில் 14.11.2024 முதல் 09.12.2024 வரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை செய்யப்பட்டது. மனுதாரருக்கு மருத்துவ செலவிற்காக ரூ.8,00,000/- மேல் செலவாகியுள்ளது. விபத்து சமயத்தில் மனுதாரருக்கு 42 வயது. அவர் மரம் வெட்டும் வேலை மற்றும் லோடு மேனாக வேலை செய்து மாதம் ரூ.30,000/-ம் சம்பாதித்து வந்தார். விபத்திற்கு TN 52 M 8174 என்ற வாகனத்தின் ஓட்டுனர் காரணமாவார். அவர் மீது ஆப்பக்கூடல் காவல் நிலைய குற்ற எண்.332/2024 BNS பிரிவுகள் 281, 125(a)-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. TN 52 M 8174 என்ற வாகனத்தின் உரிமையாளர் 1ம் எதிர்மனுதாரர் என்பதாலும், மேற்படி வாகனம் 2ம் எதிர்மனுதாரர் பெயரில் 3ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு விபத்து சமயத்தில் நடைமுறையில் இருந்ததாலும், 1,3 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ தனிதனியாகவோ இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளார்கள்.

2. ***<u>3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு:-</u>***

மனுதாரரின் மனு தவறானது என்றும், சட்டத்தின் படியும் சங்கதிகளின் படியும் நிலைநிற்கத்தக்கது அல்ல என்றும், மனு சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். TN 52 M 8174 என்ற வாகனம் 3ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் நிபந்தனைக்குட்பட்டு காப்பீடு செய்யப்பட்டுள்ளது. மனுவில் சொல்லியுள்ளவாறு விபத்து ஏற்படவில்லை. மனுதாரர் மது போதையில் வாகனம் வருவதை கவனிக்காமல் தவறான பாதையில் கவனகுறைவாக ரோட்டை கடந்து விபத்தை ஏற்படுத்தி கொண்டார். மனுதாரர் விபத்து பதிவேட்டில் மது அருந்தியுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது. விபத்திற்கு மனுதாரர் காரணம் என்பதால் இழப்பீடு கோர இயலாது. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு விபத்து சமயத்தில் தகுதி சான்று இல்லை. மேற்படி வாகனத்தின்

ஓட்டுனருக்கு விபத்து சமயத்தில் செல்லதக்க ஓட்டுனர் உரிமம் இல்லை. மேற்படி காப்பீட்டு விதிமீறல் ஏற்பட்டுள்ளதால், 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரல்ல. மோட்டார் வாகன சட்டத்தின் படி காப்பீட்டு நிறுவனத்திற்கு தகவல் தெரிவிக்கவில்லை. மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள், சிகிச்சை, மருத்துவ செலவு, ஊனம் ஆகியவற்றையும் விபத்து சமயத்தில் மனுதாரருக்கு 42 வயது என்பதையும், அவர் மரம் வெட்டும் வேலை மற்றும் லோடு மேனாக வேலை செய்து மாதம் ரூ.30,000/−ம் சம்பாதித்து வந்தார் என்பதையும், மனுதாரர் போதிய சாட்சியத்தின் மூலம் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். பல்வேறு தலைப்புகளில் மனுதாரர் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகபடியானது. எனவே 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யக்கோரி உள்ளார்.

3. மனுதாரர் தரப்பில், மனுதாரர் மாரியப்பன் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சாஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. நுண்கதிர் படத்துடன் கூடிய ஊனச்சான்று நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் கோபிச்செட்டிபாளையம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் இளநிலை உதவியாளர் தமிழரசி எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, சா.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரி வரைபடம் எ.ம.சா.ஆ.1 சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. ***தீர்வுக்குரிய பிரச்சனைகள்***:

1. விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது?

2. மனுதாரருக்கு இழப்பீட்டு தொகையை யார் கொடுக்க வேண்டும்?

3. மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?

5. ***பிரச்சினை எண். 1 மற்றும் 2 க்கான தீர்வு:−***

மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், கடந்த 14.11.2024ம் தேதி காலை சுமார் 07.45 மணியளவில் மனுதாரர் ஆப்பக்கூடல் − சக்தி பிரதான சாலையில், அத்தானி கைக்காட்டி ஜெயம் பேக்கரிக்கு அருகில், சாலையின் இடது புறத்தில் நின்று கொண்டிருந்தபோது, TN 52 M 8174 (Mahendra Supro Max) என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் ஓட்டுனர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி

எந்தவொரு போக்குவரத்து விதிமுறைகளையும் பின்பற்றாமல் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றும், விபத்து சமயத்தில், 1–ம் எதிர்மனுதாரரின் வாகனம், 3–ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு ஊர்ஜிதத்தில் உள்ளதால், 1, 3 எதிர்மனுதாரர்கள், மனுதாரருக்கு நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்று வாதிட்டார்.

6. மாறாக, 3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், மனுதாரர் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுனர் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்பதை போதிய சாட்சியத்துடன் நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், மனுதாரர் மது போதையில் வாகனம் வருவதை கவனிக்காமல் ரோட்டை கடந்து சென்று விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றும், 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனுவை தள்ளுபடி செய்ய கோரி வாதிட்டார்.

7. மனுதாரர் தரப்பு கூற்றை நிரூபிப்பதற்கு மனுதாரர் மாரியப்பன் ம.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு, முதல் தகவலறிக்கையின் கணினி நகல், விபத்து பதிவேட்டின் நகல், காயச்சான்றிதழின் நகல், ஈரோடு கேர் மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ள விடுவிப்பு சான்றின் அசல், TN 52 M 8174 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் நகல், மாதிரி வரைபடத்தின் நகல், குற்றப்பத்திரிக்கையின் நகல், மருத்துவ பில்கள் (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது), மனுதாரரின் ஆதார் அடையாள அட்டையின் நகல், Pan கார்டு நகல், வங்கி கணக்கு புத்தககத்தின் முதல் பக்கத்தின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) ஆகியவை ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.11 ஆகவும், நுண்கதிர் படத்துடன் கூடிய ஊனச்சான்று நீ.ம.சா.ஆ.1 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையை பரிசீலிக்கையில், சரவணன் த/பெ. மாரசாமி என்பவரிடம் பெற்ற எழுத்து மூலமான புகாரின் பெயரில், TN 52 M 8174 Mahindra Supro Max ன் ஓட்டுனர் P.மேட்டுபாளையத்தை சேர்ந்த கோவிந்தா மகன் பசவராஜ் மீது BNS பிரிவுகள் 281, 125(a)–ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. ம.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், (3ம் எதிர்மனுதாரர் தரப்பில்) "*என் வருமானம், தொழில் ஆகியவற்றை நிரூபிப்பதற்கான*

*ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் வழக்கிற்காக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சரவணன் என்பவர் புகார் கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். புகாரில் உள்ள சங்கதிகள் உண்மையா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடத்தில் சொல்லியுள்ள இடத்தில் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் ஆமாம். அது எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து காலை 7.45 மணிக்கு நடந்தது என்றால் ஆமாம். அப்போது வெளிச்சமான நேரம் என்றால் ஆமாம். விபத்து நடந்த ரோடு 50 அடி ரோடா என்றால் ஆமாம். நான் எதிர்மனுதாரர் வாகனம் வருவதை கவனிக்காமல் நடுரோட்டை தாண்டி சென்று எனது கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் ரோட்டை கடந்து நின்று கொண்டிருந்தேன். விபத்திற்கு நான்தான் முழுக்காரணம் என்றால் இல்லை. நான் தற்போது எங்கு வேலை செய்கிறேன் என்றால் வீட்டில்தான் உள்ளேன். நான் வழக்கிற்காக வேலைக்கு செல்லவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை. எவ்வளவு நாட்கள் மருத்துவமனையில் இருந்தேன் என்றால் 24 நாட்கள். எனக்கு ஏற்பட்ட காயங்கள் முற்றிலும் குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. எனக்கு விபத்தில் ஏற்பட்ட காயங்களால் வருமான இழப்போ, ஊனமோ இல்லை என்றால், சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு அதிகப்படியானது என்றால் சரியல்ல."* என்று மனுவை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளார்.

9. ம.சா.ஆ.2 விபத்து பதிவேடு, ம.சா.ஆ.3 காயச்சான்றிதழ், ம.சா.ஆ.4 விடுவிப்பு சான்று, ம.சா.ஆ.6 மற்றும் எ.ம.சா.ஆ.1 மாதிரி வரைப்படத்தை பரிசீலிக்கையில், விபத்து நடந்த தேதி, இடம், நேரம் ஆகியவை மனுவில் சொல்லியுள்ளவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ.7 குற்றப்பத்திரிக்கை 1ம் எதிர்மனுதாரர் மீது BNS பிரிவுகள் 281, 125(b)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

10. ம.சா.ஆ.5 TN 52 M 8174 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பரிசீலிக்கையில், மேற்படி வாகனம் 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்பதும், மேற்படி வாகனத்தை விபத்து சமயத்தில் அவரே ஓட்டி சென்றுள்ளார் என்பதும், அவருக்கு விபத்து சமயத்தில் செல்லத்தக்க ஓட்டுனர் உரிமம் உள்ளது என்பதும் தெரிய வருகிறது. மேற்படி வாகனத்திற்கு சேதாரங்கள் எதுவும்

ஏற்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

11. இவ்வழக்கில், TN 52 M 8174 என்ற வாகனத்தின் உரிமையாளரான 1ம் எதிர்மனுதாரர் மற்றும் காப்பீடு செய்தவரான 2ம் எதிர்மனுதாரர் ஆகியோர் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளனர். மேற்படி வாகனத்தின் காப்பீட்டு நிறுவனமான 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் சொல்லியுள்ள கூற்றை கோபிச்செட்டிபாளையம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் இளநிலை உதவியாளர் தமிழரசி எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தனது முதல் விசாரணையில், "*நான் கோபிசெட்டிப்பாளைம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்துள்ளது. கோபிசெட்டிப்பாளைம் வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்கள் என்னை நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க அனுமதி கடிதம் கொடுத்துள்ளார். TN 52 M 8174 என்ற மகேந்திர சுப்ரோ மேக்ஸ் என்ற வாகனத்திற்கு விபத்து தேதியான 14.11.2024 தகுதிசான்று உள்ளது. அந்த வாகனத்தின் லேடன் அளவு 2200 KG உள்ளது. பொதுவாக லேடன் அளவு 3000க்குமேல் சென்றால் தான் பர்மிட் எடுக்க வேண்டும். அதனால் TN 52 M 8174 என்ற மகேந்திர சுப்ரோ மேக்ஸ் என்ற வாகனம் அனுமதி சீட்டு அல்லாத வாகன வகையை சார்ந்தது. மேற்படி அனுமதி கடிதத்தின் அசல், தகுதிசான்று , பதிவு சான்று ஆகியவற்றின் உண்மை நகல் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.*" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12. மேற்படி எ.ம.சா.1 மற்றும் சா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் TN 52 M 8174 என்ற மகேந்திர சுப்ரோ மேக்ஸ் என்ற வாகனம் அனுமதி சீட்டு அல்லாத வாகன வகையை சார்ந்தது என்பதும், அந்த வாகனத்திற்கு விபத்து தேதியான 14.11.2024 ல் தகுதி சான்று நடைமுறையில் உள்ளது என்பதும் தெரியவருகிறது.

13. 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் விபத்து சமயத்தில் மனுதாரர் மதுபோதையில் இருந்தார் என்றும், விபத்து பதிவேட்டில் மதுவாடை இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றும், அதனால் விபத்திற்கு மனுதாரர் பகரபொறுப்பாளியாகிறார் என்று சொல்லப்பட்டுள்ளது. அது குறித்து மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் மது போதையில் இருந்தார் என்பதற்கு இரத்த பரிசோதனை செய்யப்படவில்லை என்றும், விபத்து சமயத்தில் மனுதாரர் மதுபோதையில் இல்லை

என்றும், அவர் காலை நேரத்தில் மது அருந்துவதற்கு வாய்ப்பில்லை என்றும் வாதிட்டார்.

14. ***2016 (1) TNMAC 204 (DB) (KER) (Jose Vs. United India Insurance Company Ltd)*** என்ற முன்மாதிரி தீர்ப்பில், கீழ்க்கண்டவாறு தீர்வு காணப்பட்டுள்ளது.

***"Claimant while crossing road, dashed by Car – Tribunal attributing Contributory Negligence on part of injured/Claimant on ground that smell of alcohol was present in his breath as per Wound Certificate and he was crossing road and was in middle of road at time of accident – If, proper – Entry made by Doctor in Wound Certificate i.e. "Smell of alcohol present in breath" cannot be ground to hold that injured was under influence of alcohol and not stable – No other evidence to show that injured was under influence of alcohol which contributed to accident – Further, nothing unusual in crossing a road, when using public streets is a common law right of every citizen – A vehicle Driver not entitled to drive vehicle negligently injuring people crossing road – Driver needed to take required care to avoid accident – Finding of Tribunal attributing 50% Contributory Negligence on part of injured, held, unsustainable."***

15. மேற்படி முன்மாதிரி தீர்ப்பின்படி, ம.சா.ஆ.2 விபத்து பதிவேட்டில் மது அருந்தியதற்கான வாடை இருந்ததாக சொல்லப்பட்டுள்ளதை வைத்து கொண்டு மனுதாரர் விபத்திற்கு பகரபொறுப்பாளியாகிறார் என்று கருத்தில் கொள்ள இயலாது என்று இவ்வாயம் கருதுகிறது.

16. எனவே, மேலே விவரிக்கப்பட்ட காரணங்களின் அடிப்படையில், மனுதாரர் கூறுகிற வகையில் விபத்து நடந்துள்ளது என்பதும், மேற்படி விபத்து 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என்பதும், மேற்படி சாட்சியம் மற்றும் ஆவணங்களிலிருந்து மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இவ்வாயம் தீர்மானித்து, மேற்படி விபத்திற்கு, 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவே காரணம் என்று இவ்வாயம் முடிவு செய்கிறது.

17. ம.சா.ஆ.5 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் உள்ள காப்பீட்டு விவரத்தை

பரிசீலிக்கையில், மேற்படி வாகனம் 1ம் எதிர்மனுதாரர் பெயரில், 3ம் எதிர்மனுதாரரின் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும், மேற்படி காப்பீடு 23.08.2024 முதல் 22.08.2025 வரை அதாவது விபத்து நடந்த தேதியான 14.11.2024 தேதியன்று ஊர்ஜிதத்தில் உள்ளது என்று தெரிய வருகிற நிலையில், 1–ம் எதிர்மனுதாரரின் செய்கைக்காக, 3–ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு நஷ்டஈட்டு தொகையை கொடுக்க கடமைப்பட்டவர் என்று முடிவு செய்து, அவ்வாறே பிரச்சனை 1, 2க்கு இவ்வாயம் விடையளிக்கிறது.

18. ***<u>பிரச்சனை எண்.3 –க்கான தீர்வு</u>:***

விபத்து சமயத்தில் மனுதாரருக்கு வயது 42 என்றும், மனுதாரர் நல்ல திடகாத்திரமாகவும், உடல் ஆரோக்கியத்துடனும் இருந்து, மரம் வெட்டும் வேலை மற்றும் லோடு மேனாக வேலை செய்து மாதம் ரூ.30,000/–ம் வரை சம்பாதித்து, குடும்பத்தை நடத்தி வந்தார் என்றும், விபத்திற்கு பின்பு மனுதாரர் தனது குடும்பத்தை சரிவர பராமரிக்க முடியாமல் வருமான இழப்பு ஏற்பட்டு, மன ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் கஷ்ட, நஷ்டத்துடன் வாழ்ந்து வருகிறார் என்றும், மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டார். அதற்கு மாறாக, 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரரின் வயது, மாத வருமானம், தொழில் ஆகியவை குறித்து ஆதாரத்துடன் நிரூபிக்கப்படவில்லை என்று வாதிட்டார்.

19. விபத்து சமயத்தில் மனுதாரருக்கு வயது 42 என்றும், மனுதாரர் மரம் வெட்டும் வேலை மற்றும் லோடு மேனாக வேலை செய்து மாதம் ரூ.30,000/–ம் சம்பாதித்து வந்தார் என்பதற்கு சாட்சி, சான்றாவணம் எதுவும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. ம.சா.ஆ.2 விபத்து பதிவேட்டில் மனுதாரருக்கு வயது 45 என்றும், ம.சா.ஆ.9 ஆதார் அடையாள அட்டையின் நகலில் மனுதாரரின் பிறந்த தேதி 01.01.1982 என்றும் சொல்லப்பட்டுள்ளது. இந்நிலையில் விபத்து தேதியில் மனுதாரர் 42 வயதுடைய நபர் என்று இவ்வாயம் முடிவு செய்கிறது. மனுதாரரின் வயது, விபத்து நடந்த தேதி ஆகியவற்றை கருத்தில் கொண்டு, அவர் சாதாரண வேலை செய்வதாக எடுத்துக் கொண்டாலும், அவர் மாதம் ரூ.15,000/– வரை வருவாய் ஈட்டக்கூடிய நபர் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

20. மேற்படி விபத்தின் காரணமாக மனுதாரர் ஈரோடு எமர்ஜென்சி கேர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டு அங்கு 14.11.2024 முதல் 08.12.2024 வரை 25 சுமார் நாட்கள் RTA with right leg bimalleolar fracture open, right foot crush degloving injury with skin loss, left leg skin avulsion inury ஆகிய காயத்திற்கு Wound debridement and orif with plating for lateral malleolus and CC screw for medial malleolus done on 16.11.2024, Transposition flap cover to medial malleolus with SSG done on 23.11.2024 சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்பதும் ம.சா.ஆ.4 விடுவிப்பு சான்று மூலமாக தெரியவருகிறது.

21. மனுதாரருக்கு 1) Right ankle degloving injury 15x10x4cm with exposed boe fracture, 2) Left 5th and 3rd toe puncture wound, 3) Right lower lip abrasion wound 2x1cm, 4) Right knee abrasion 5x5cm and 2x2cm, 5) Right toe degloving injury, 6) Nasal swelling deforming காயங்கள் உள்ளது என்றும், மேற்படி காயங்களில் 1,3,5 மற்றும் 6 வது காயங்கள் கொடுங்காயங்கள் என்றும், மற்ற காயங்கள் சாதாரண காயங்கள் என்றும் ம.சா.ஆ.3 காயச்சான்றிதழில் சொல்லப்பட்டுள்ளது. இந்நிலையில் குறைந்தது 3 மாத காலம் மனுதாரரால் எந்த வேலைக்கும் செல்ல இயலாது. எனவே மேற்படி சிகிச்சையில் இருந்த காலத்திற்கு வருமான இழப்பாக 3 x15,000 =45,000/- மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

22. மனுதாரரின் ஊனம் குறித்து பரிசோதனை செய்வதற்காக இந்நீதிமன்றத்தால் அரசு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டு நுண்கதிர் படத்துடன் கூடிய ஊனச்சான்றிதழ் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விபத்தில், மனுதாரருக்கு RTA bimalleolar fracture RT, RT foot crush injury ஏற்பட்டுள்ளதாகவும், அதனால் அவருக்கு Pain and PUS discharge from wound ஏற்பட்டுள்ளதாகவும், மனுதாரருக்கு மருத்துவமனையில் 15% நிரந்தர இயலாமை இருப்பதாக ஊனச்சான்றிதழில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

23. ***CMA.No.3003 and 3096/2024 (Sudhakar Vs.Geetha)*** என்ற வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் கீழ்கண்டவாறு தீர்வு காணப்பட்டுள்ளது.

***“Tribunal has adopted the per percentage method and fixed a sum of Rs.5,000/- per percentage. Considering the fact that the accident had taken place in the year 2020, this court is inclined to fix a sum of Rs.8,000/- per percentage”***

24. மேற்படி மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த முன்மாதிரி தீர்ப்பில் பொருளாதார வீழ்ச்சியை கருத்தில் கொண்டு 2020ம் வருடத்தில் நடந்த விபத்திற்கு 1% ஊனத்திற்கு ரூ.8,000/- வழங்கலாம் என்று தீர்வு கண்டுள்ளதன் அடிப்படையில், மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனத்தை கருதி, 1% ஊனத்திற்கு ரூ.8,000/- என கணக்கிட்டு 15% ஊனத்திற்கு 15x8000=ரூ.1,20,000/- மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

25. மனுதாரர் தரப்பில் மருத்துவ செலவுகளுக்காக ம.சா.ஆ.8 மருத்துவ பில்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி மருத்துவ பில்கள் குறித்து அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை. இந்நிலையில், மேற்படி ம.சா.ஆ.8 மருத்துவ பில்கள் அடிப்படையில், ரூ.5,42,475/- தொகை மருத்துவ செலவிற்காக மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது

26. ம.சா.ஆ.2 விபத்து பதிவேடு, ம.சா.ஆ.3 காயச்சான்றிதழ், ம.சா.ஆ.4 விடுவிப்பு சான்று மற்றும் நீ.ம.சா.ஆ.1 நுண்கதிர் படத்துடன் கூடிய ஊனச்சான்று ஆகியவற்றை பரிசீலித்த வகையில், மேற்படி விபத்தின் போது மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனை, வசதி இழப்பு ஆகியவற்றிற்கும், மனுதாரருக்கு சிகிச்சை காலத்திலும் அதன்பிறகும் உதவியாளர் உடனிருந்து கவனித்துக்கொண்ட வகையில் ஏற்பட்ட செலவினங்கள், மனுதாரருக்கு ஏற்பட்ட ஊட்டச்சத்து மற்றும் போக்குவரத்து செலவினங்கள், உடை சேதம் ஆகியவற்றிற்கு, இத்தீர்ப்பாயத்தால் நீதியின்பால் உகந்ததாக நிர்ணயம் செய்யப்படும் நஷ்ட ஈட்டுத் தொகை கீழ்க்கண்டவாறு பட்டியலிடப்படுகிறது.

| **வ. எண்** | **இழப்பீடு வழங்கப்படும் இனங்கள்** | **பகிர்ந்தளிப்பு செய்யப்படும் தொகை** |
|---|---|---|
| 1. | மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைகளுக்காக | ₹.50,000/- |
| 2. | மனுதாரருக்கு ஏற்பட்ட வருமான இழப்பிற்காக | ₹.45,000/- |
| 3. | மனுதாரருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவினங்களுக்காக | ₹.5,42,475/- |
| 4. | மனுதாரருக்கு ஏற்பட்ட போக்குவரத்து செலவினங்களுக்காக | ₹.20,000/- |
| 5. | மனுதாரரின் ஊட்டச்சத்து செலவினங்களுக்காக | ₹.20,000/- |

| | | |
|---|---|---|
| 6. | மனுதாரர் உதவியாளர் வைத்துக்கொண்டதற்கு ஏற்பட்ட செலவினங்களுக்காக | ₹.20,000/– |
| 7. | மனுதாரரின் உடைகளுக்கு ஏற்பட்ட சேதங்களுக்காக | ₹.1,000/– |
| 8. | வாழ்வதற்கு வசதி குறைவு (அசௌகரியத்திற்கான இழப்பீடு) | ₹.20,000/– |
| 9. | நிரந்தர ஊனத்திற்கான இழப்பீடு | ₹.1,20,000/– |
| | மொத்தம் | ₹.8,38,475/– |

27. மேற்படி மொத்த இழப்பீடு தொகை ரூ.8,38,475/–ஐ மனுதாரருக்கு 3ம் எதிர்மனுதாரர் செலுத்த வேண்டும் என்று இப்பிரச்சினைக்கு இத்தீர்ப்பாயம் தீர்வு காண்கிறது.

முடிவில், கீழ்கண்டவாறு உத்தரவிடப்படுகிறது.

1. இம்மனு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

2. மாண்புமிகு உச்சநீதிமன்றம் சிவில் அப்பீல் எண்.4299/2025 (பர்மிந்தர் சிங் – எதிர்– ஹனிகோயல் மற்றும் பலர்) மற்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் ROC.No.55584/2025, நாள்: 02.07.2025ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி, மொத்த இழப்பீடு தொகையான ரூ.8,38,475/–ஐ இந்த மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை செலுத்தும் தேதி வரை 7.5% வட்டியுடன் (தவறுகை காலம் ஏதேனும் இருப்பின் நீங்கலாக) 30 நாட்களுக்குள், மனுதாரர் மீதமுள்ள நீதிமன்ற கட்டணத்தை செலுத்தியதை உறுதி செய்த பிறகே, 3ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு (ம.சா.ஆ 11) நேரடியாக செலுத்தி வைக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

| மனுதாரர் பெயர் | வங்கி கணக்கு எண். | வங்கியின் விவரம் |
|---|---|---|
| மாரியப்பன்,<br>த/பெ. கோவிந்தசாமி, | 10239599621 | தமிழ்நாடு கிராம வங்கி.<br>திண்டல் கிளை. |

3. மேற்படி மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின் படி, மேற்படி தொகை செலுத்தியது குறித்து உரிய ஆவணத்துடன் நீதிமன்றத்திற்கு தெரிவிக்கவேண்டும்.

4. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 11.5.2020–ம் தேதி Tr. CMP. Nos. 264 to 281 of 2020 M/s Cholamandalam MS Genl. Ins. Co. Ltd., Vs. Mr. Ayyannar.S. and others

என்ற வழக்கில் வழங்கிய உத்தரவுக்கிணங்க தனியாக தீர்ப்பாணை தயாரிக்கப்படவில்லை.

5. மனுதாரர் செலுத்திய நீதிமன்றக்கட்டணம் ₹.20/-. மனுதாரர் இழப்பீடு தொகைக்கான மீதமுள்ள நீதிமன்ற கட்டணம் ரூ.7,737.25/- ஐ 10 தினங்களுக்குள் செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு செலுத்தியதற்கான ரசீதுகள் இரண்டு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, பரிசீலித்து, உரிய முத்திரை மற்றும் கையெழுத்து பெற்ற பிறகு, அதனை 3ம் எதிர்மனுதாரரிடம் கொடுக்கவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

6. வழக்கறிஞர் கட்டணம் ரூ.15,385.00/- மற்றும் மொத்த செலவுத்தொகை ரூ.23,440.75/- என நிர்ணயிக்கப்படுகிறது.

**<u>செலவுப் பட்டியல்</u>**

| | மனுதாரர்<br>ரூ. பை |
|---|---|
| மனுவிற்கான நீதிமன்ற முத்திரைக் கட்டணம் | 7,757.25 |
| வக்காலத்து நாமா ஸ்டாம்பு | 10.00 |
| தஸ்தாவேஜுகளுக்கு ஸ்டாம்பு | 100.00 |
| வழக்கறிஞர் கட்டணம் | 15,385.00 |
| புராசஸ் கட்டணம் | 88.50 |
| விண்ணப்ப செலவு | -- |
| எழுத்துக் கூலி | 100-00 |
| மொத்தம் | 23,440.75 |

இந்த ஆணையுரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரிடையாக தட்டச்சு செய்யப்பட்ட பின்னர், என்னால் சரி பார்க்கப்பட்டு 19.08.2026 ம் நாள் இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KANYADEVI K
Digitally signed by KANYADEVI K
Date: 2026.08.19 17:43:13 +0530

மோட்டார் வாகன விபத்து கோரிக்கை
தீர்ப்பாய நீதிபதி மற்றும் சிறப்பு
சார்பு நீதிபதி எண்.1 சேலம்.

***<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>***:

ம.சா.1 – திரு.மாரியப்பன், (மனுதாரர்)

***<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>***:

| வ.எண். | ஆவணங்களின் பெயர் |
|---|---|
| ம.சா.ஆ.1 | முதல் தகவலறிக்கையின் கணினி நகல் |
| ம.சா.ஆ.2 | விபத்து பதிவேட்டின் நகல் |
| ம.சா.ஆ.3 | காயச்சான்றிதழின் நகல் |
| ம.சா.ஆ.4 | ஈரோடு கேர் மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ள விடுவிப்பு சான்றின் அசல் |
| ம.சா.ஆ.5 | TN 52 M 8174 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் நகல் |
| ம.சா.ஆ.6 | மாதிரி வரைபடத்தின் நகல் |
| ம.சா.ஆ.7 | குற்றப்பத்திரிக்கையின் நகல் |
| ம.சா.ஆ.8 | மருத்துவ பில்கள் (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது), |
| ம.சா.ஆ.9 | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டையின் நகல் |
| ம.சா.ஆ.10 | மனுதாரரின் Pan கார்டு நகல் |
| ம.சா.ஆ.11 | மனுதாரரின் வங்கி கணக்கு புத்தககத்தின் முதல் பக்கத்தின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) |

***<u>3 ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி:</u>***

எ.ம.சா.1 – திருமதி. தமிழரசி (கோபிச்செட்டிபாளையம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் இளநிலை உதவியாளர்)

***<u>3 ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்:</u>***

எ.ம.சா.ஆ.1 – மாதிரி வரைப்படம்

***<u>சாட்சி தரப்பு சான்றாவணங்கள்:</u>***

சா.சா.ஆ.1 – அனுமதி கடிதத்தின் அசல், தகுதிசான்று , பதிவு சான்று ஆகியவற்றின் உண்மை நகல்

***<u>நீதிமன்ற சான்றாவணம்</u>***:

நீ.ம.சா.ஆ.1. – நுண்கதிர் படத்துடன் கூடிய ஊனச்சான்று.

KANYADEVI K

Digitally signed by KANYADEVI K
Date: 2026.08.19 17:43:02 +0530

மோட்டார் வாகன விபத்து கோரிக்கை
தீர்ப்பாய நீதிபதி மற்றும் சிறப்பு
சார்பு நீதிபதி எண்.1 சேலம்.